**செய்தி வெளியீடு எண்: 70/2026** **நாள்: 02.11.2026**

**பத்திரிகைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II ன் கீழ், ஒன் பாராமவுண்ட் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் போரூர் புறவழிச்சாலை மெட்ரோ இரயில் நிலையத்தை இணைக்கும் புதிய மெட்ரோ இணைப்புச் சேவை தொடங்கப்பட்டது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், முதல் மற்றும் கடைசி மைல் இணைப்பை மேலும் வலுப்படுத்துவதுடன், புதிதாகப் பயன்பாட்டிற்கு வந்துள்ள இரண்டாம் கட்ட மஞ்சள் வழித்தட மெட்ரோ இரயில் சேவைகளை எளிதில் அணுகும் வகையில், போரூரில் அமைந்துள்ள ஒன் தொழில்நுட்ப நிறுவனத்தையும் போரூர் புறவழிச்சாலை மெட்ரோ இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் மெட்ரோ இணைப்புச் சேவையை இன்று (02.11.2026) தொடங்கியுள்ளது.

ஏற்கனவே ஒன் பாரமவுண்ட் நிறுவனத்திற்கும் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்திற்கும் இடையே செயல்பட்டு வரும் மெட்ரோ இணைப்புச் சேவையின் வெற்றியைத் தொடர்ந்து, போரூர் வழித்தடத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பயணத் தேவை மற்றும் பயண விருப்பங்களை மதிப்பிடும் நோக்கில் இச்சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இச்சேவையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. மனோஜ் கோயல் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. சதீஷ் பிரபு (இயக்கம் மற்றும் பராமரிப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், ஒன் பாரமவுண்ட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் இச்சேவையை இயக்கும் நியூ டிராவல் லைன்ஸ் பிரைவேட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மெட்ரோ இணைப்புச் சேவையானது, கீழ்க்கண்ட வசதிகளுடன் கூடிய 17+1 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட டெம்போ டிராவலர் வாகனங்கள் மூலம் இயக்கப்படுகிறது.

- கைப்பேசி செயலி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி.
- வாகனத்தின் நேரடி இருப்பிடத்தைக் கண்காணிக்கும் வசதி.
- நிகழ்நேர வருகை தகவல் (ETA).
- நிறுவனப் பயணிகளுக்கான பிரத்யேக போக்குவரத்து வசதி.

இச்சேவையின் மூலம், ஒன் பாரமவுண்ட் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்கள் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் மற்றும்

போரூர் புறவழிச்சாலை மெட்ரோ இரயில் நிலையம் ஆகிய இரு நிலையங்களையும் எளிதில் சென்றடைய வசதியான, நம்பகமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து வசதியைப் பெறுகின்றனர்.

இந்நிகழ்வில் பேசிய சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அதிகாரிகள், தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான மெட்ரோ இணைப்புச் சேவைகள், பொதுப் போக்குவரத்தை அதிக அளவில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதிலும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதிலும், முக்கிய வேலைவாய்ப்பு மையங்களுக்குச் செல்லும் பணியாளர்களின் பயண அனுபவத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று தெரிவித்தனர்.

போரூர் புறவழிச்சாலை மெட்ரோ இரயில் நிலையத்தில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இச்சேவை ஒரு முன்னோடி முயற்சியாகச் செயல்படுத்தப்படுகிறது. பணியாளர்களின் வரவேற்பு மற்றும் பயணிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து, அதன் அடிப்படையில் கூடுதல் வாகனங்களை இணைத்தல், பயணங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் எதிர்காலத்தில் இணைப்புச் சேவைகளை விரிவுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

**பெருநிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு அழைப்பு**

சென்னை முழுவதும் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், பெருநிறுவன வளாகங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்பூங்காக்கள், மருத்துவமனைகள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs) மற்றும் வணிக வளாகங்கள் ஆகியவை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து மெட்ரோ இணைப்புச் சேவைகள் மற்றும் இதர பிரத்யேக முதல் மற்றும் கடைசி மைல் இணைப்புச் சேவைகளைச் செயல்படுத்த முன்வருமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அழைப்பு விடுக்கிறது.

பணியாளர்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல், தங்களது நிறுவன வளாகங்களை எளிதில் சென்றடைவதற்கான வசதியை ஏற்படுத்துதல், தனியார் வாகனங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், சுற்றுச்சூழல், சமூகப் பொறுப்பு மற்றும் நிலைத்தன்மை சார்ந்த இலக்குகளை ஆதரித்தல் மற்றும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்கள், பொருத்தமான இணைப்புச் சேவைகளைச் செயல்படுத்துவது குறித்து ஆலோசிக்க சென்னை மெட்ரோ

இரயில் நிறுவனத்தின் கடைசி மைல் இணைப்புக் குழுவை (Last Mile Connectivity - LMC Team) தொடர்புகொள்ளலாம்.

இத்தகைய கூட்டாண்மைகள் மூலம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பின்வரும் நோக்கங்களை அடைய இலக்கு கொண்டுள்ளது:

- பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- தனியார் வாகனப் பயன்பாடு மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல்.
- பணியாளர்களின் பயண வசதியை மேம்படுத்துதல்.
- நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான போக்குவரத்தை ஊக்குவித்தல்.
- சென்னையில் பல்வேறு போக்குவரத்து முறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்.

சென்னையின் வளர்ந்து வரும் பணியாளர் சமூகத்தினருக்குப் பொதுப் போக்குவரத்தை விருப்பமான பயண முறையாக மாற்றும் வகையில், புதுமையான போக்குவரத்துத் தீர்வுகளை உருவாக்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களுடன் இணைந்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது

நிறுவனங்களுக்கான மெட்ரோ இணைப்புச் சேவை தொடர்பான விசாரணைகளுக்கு:

- சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் - கடைசி மைல் இணைப்புக் குழு (LMC Team)
- மின்னஞ்சல்: lmc@cmrl.in

**வெளியீடு: மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**